(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.1/2015 |
| Deposition Of Witness for | : | PW12 |
| Name | : | **Thiru.Durai Vishwanathan** |
| Father's Name | : | Thiru.Duraisamy |
| Village | : | Senthani |
| Taluk | : | Thiruvadanai |
| Calling | : | Sub Registrar |
| Age | : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **7th August 2025.**

(1வது எதிரி முன்னிலை, 2வது எதிரி முன்னிலையில்லை, அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டம், சேந்தை கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 2019-ம் வருடம் ஜனவரி மாதம் சார்பதிவாளராக (நிர்வாகம்) காரைக்குடியில்

பணிபுரிந்து பணிஓய்வு பெற்றேன். கடந்த 2012-ம் ஆண்டு தேவகோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணியாற்றினேன். காவல் துறை ஆய்வாளர் கடிதம் மூலம் கேட்டுக்கொண்டதற்கிணங்க புதுக்கோட்டை மாவட்டம் முன்னாள் தோட்டக்கலை உதவி இயக்குநர் திரு.சண்முகசுந்தரம், அவரது மனைவி மற்றும் மகன்கள் பெயரில் உள்ள சொத்துக்கள் வாங்கியது குறித்து இவ்வலுலக பதிவுகளில் உள்ளதா என்று கேட்டனர். அவரது மனைவி பெயர் பாக்கியலெட்சுமி, மகள், மகன்கள் பெயர்கள் ஞாபகமில்லை.

2. கடந்த **13.08.2012**-ம் தேதி லஞ்ச ஒழிப்பு துறை காவல் ஆய்வாளர் அவர்களுக்கு அந்த கடிதத்தில் கண்ட ஆவணங்களின் நகலினை சான்றொப்பமிட்டு **காவல் ஆய்வாளர் அவர்களுக்கு** மேற்படி கடிதத்தின் வாயிலாக சமர்ப்பித்தேன். அந்த **கடிதம் அ.த.சா.ஆ-40** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கடிதத்தில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களில் கடைசி பக்கத்தில் சான்றொப்பமிட்டு அலுவலகமுத்திரை இட்டுள்ளேன். அந்த ஆவணங்கள் என்னிடம் காண்பிக்கப்படுவதுதான். மேற்படி **என்னால் சான்றொப்பமிடப்பட்ட 45 ஆவணங்கள் அ.த.சா.ஆ.41 (வரிசை 1 முதல் 45)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பின்னர் 29.08.2012–ம் தேதி காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க மித்ரா வயல் செங்காத்தங்குடி கிராம வழிகாட்டி பதிவேட்டின்படி வழிகாட்டி மதிப்பினை பூர்த்தி செய்து காவல் ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பினேன். அந்த **கடிதம் உட்பட கோப்புகள் (பக்கங்கள் 20) அ.த.சா.ஆ–42** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு தொடர்பாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். (அ.த.சா.ஆ–41 ல் 1வது வரிசையான கடந்த 31.12.1997–ம் தேதியிட்ட ஆவண எண்.1907/1997 என்ற கிரைய ஆவணம் சோதனை காலத்திற்கு முன்பு உள்ள ஆவணம் என்று அதனை குறியீடு செய்வதற்கு எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் ஆட்சேபனை செய்யப்பட்டது. மேற்படி ஆட்சேபனையுடன் ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.)

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

31.12.1997–ம் தேதியிட்ட ஆவண எண்.1907/1997 என்ற ஆவணத்தில் கிரைய தொகை ரூ.9000/– என்று போடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். அதில் முத்திரை கட்டணம் மற்றும் பதிவு கட்டணம் ரூ.1080/– என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரியல்ல, முத்திரை கட்டணம் ரூ.1080/–, பதிவு கட்டணம் ரூ.150/– என்று

குறிப்பிடப்பட்டுள்ளது. ஆக மொத்தம் ரூ.1230/- ஆகும்.

<u>**மறுவிசாரணை :**</u> இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

ANITHACHRISTY J

Digitally signed by ANITHACHRISTY J
Date: 2025.08.07 16:18:44 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.